மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவரவர்களே, வடாற்காடு, சேலம் மாவட்டங்களில் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் துணைத் திட்டத்தின்கீழ் ஆறாவது, ஏழாவது திட்டக் காலத்திலே இப்படிப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்று பொதுப் பணித்துறைக்குத் திட்டங்கள் அனுப்பப் பட்டிருக்கின்றன என்று தெரிய வருகிறது.

திரு. ஏ. எம். சேதுராமன் : துணைத் தலைவரவர்களே, வடாற்க்காடு மாவட்டத்தில் ஆற்காடு தொகுதியில், திமிரி ஒன்றியத்தில் ஆற்காடுக்கும் வேலூருக்கும் இடையில் உள்ள வெங்கடாபுரம் என்ற கிராமத்தில் இப்படியொரு டேம் கட்டுவதற்காக ஏற்கனவே கலெக்டரிடத்தில் மனுக் கொடுத்து அது பரிசீலனையில் இருந்து வருகிறது. இது பொதுப் பணித்துறை மூலம் எடுக்கப் படுமா ? அல்லது ஒன்றியத்தின் சார்பாக எடுக்கப்படுமா அல்லது வேளாண்மைத் துறையின் சார்பாக எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதுபற்றித்தான் அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

போச்சம்பள்ளி ஆலையில் கடலை எண்ணெய் தயாரிக்கும் திட்டம்.

* வினா எண். 385 திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக எண்ணெய் ஆலையில் (தருமபுரி மாவட்டம், போச்சம்பள்ளி) கடலை எண்ணெய் தயாரிப்பதற்கு அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) தருமபுரி மாவட்டம், போச்சம்பள்ளியில் உள்ள தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்தின், சூரியகாந்தி எண்ணெய்த் தொழிற்சாலையில் கடலெண்ணெய் தயாரிக்க மைய அரசு ஜூலை 1981-ல் அனுமதி வழங்கியுள்ளது. நிலக்கடலை பருவத்தில் அவற்றை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கொள்முதல் செய்து கடோலா என்ற பெயரில் சுத்தரிக்கப்பட்ட கடலெண்ணெய் தயாரித்து விற்பனை செய்ய திட்டமிடப் பட்டுள்ளது.

1982 மார்ச்சு 11]

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதுபோன்ற எண்ணெய் ஆலைகள் தமிழகத்தில் எத்தனை அமைக்க அரசு கருதியுள்ளது என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவரவர்களே, போச்சம்பள்ளியைப்பற்றி மட்டும்தான் விளக்கம் இருக்கிறது.

திரு. என் எஸ், வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தக் கடலை எண்ணெய் பொதுவாக சமுதாயத்தில் இருக்கின்ற எல்லா மக்களுக்கும், குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால் நடுத்தர மக்களால் அதிகமாகப் பயன்படுத்தப்படும் எண்ணெயாக இருக்கின்ற காரணத்தால் மக்களுக்குக் குறைந்த விலையிலே அரசிலேயே கொடுக்க முடியும் என்கின்ற நினைவு இருக்கின்ற காரணத்தினாலேயும், மாவட்டத்திற்கு ஒன்று என்ற முறையிலே அரசாங்கமே மணிலாப் பருப்புகளைக் கொள்முதல் செய்து இதுபோன்ற ஆலைகளை அமைக்க இனியாவது அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவரவர்களே, நான் எற்கனவே வேளாண்மைத்துறை மானியத்தின் மூலமும் தெரிவித்ததைப் போல வடஆற்காடு, தென்னாற்காடு, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் வைத்து நாம் ‘‘ ஆனந்த் ’’ பாணியில் ஒரு நிலக்கடலை உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுடைய கூட்டுறவு இணையம் ஒன்றைத்தொடங்கியிருக்கிறோம். அவைகள் உற்பத்தியைத் தொடங்க ஆரம்பிக்கின்ற நேரத்தில் சமையல் எண்ணெய் பற்றாக் குறை முற்றிலுமாக நீங்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டத்திலுள்ள அந்த எண்ணெய் ஆலையில்—கடோலா என்கின்ற எண்ணெய் தயார் செய்கின்ற நிலை ஏற்பட்டு ஒரு ஆண்டுக் காலம் ஆகி, ஓராண்டு விழா கூட இரண்டு நாட்களுக்கு முன்னால் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்றிருக்கிறது. அங்கே எவ்வளவு கடலை எண்ணெய் அடைக்கப்பட்டிருக்கிறது ? இதுவரையிலும் தயாரிக்கப்பட்டிருப்பது எவ்வளவு ? அது எவ்வளவு தயாரிக்க முடியும் என்ற நிலையில் இருக்கிறது என்ற விவரங்களை அறிய விரும்பவதோடு, மேற்கொண்டு அது வளர்ச்சி உறுவதற்கு அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவரவர்களே, 12,000 மெட்ரிக் டன் நிலக்கடலைப் பருப்பிலேயிருந்து எண்ணெய் எடுக்கின்ற அனுமதியை மைய அரசு வழங்கியிருக்கிறது. அந்த வகையிலேதான் திட்டமிட்டு நாம் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்.